Bishop George Rajendran SDB
D i o c e s e o f T h u c k a l a y

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Pastoral letter No/GR/30/2016

# ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!
அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்,
ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும்
அமைதியும் அருளும் உரித்தாகுக.

இறைவன் உலகுக்கு கொடுத்த ஒப்பற்ற பரிசினை நினைவுப்படுத்தும் நாளே கிறிஸ்து பிறப்பு நாள் அல்லது கிறிஸ்துமஸ். இந்த பரிசு என்பது உலகமீட்பராம் ஈசோ மெசியாவே. இது இறைவன் உலகின் மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்படுத்துதலே அன்றி வேறொன்றுமில்லை. நமது மறைமாவட்டம், ஊர் மற்றும் உலகம் முழுவதும் பரந்து விரிந்து கிடக்கின்ற விண்மீன் வடிவிலான மின் விளக்குகளும் வானளாவ உயர்ந்து நிற்கும் கிறிஸ்மஸ் மரங்களும், கடைகளில் அலைமோதும் மக்களின் ஆரவாரமும், கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியே. இம்மனமகிழ்ச்சியான இவ்வேளையில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துக்களை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருகின்ற டிசம்பர் 25-ம் தேதி கிறிஸ்து பிறப்புவிழாவை மிக்க மகிழ்வுடன் கொண்டாடும் நாம், இவ்வேளையில், நமது பார்வையை பின்னோக்கி செலுத்தினால் நமக்கு வரலாற்று உண்மையான கிறிஸ்து பிறப்பு விழாவை காண இயலும். அதேவேளையில் நமது சிந்தனையை முன்னோக்கிச் செலுத்தினால் நம் வாழ்வின் ஒவ்வொரு தளங்களிலும் இணைந்து கிடக்கின்ற அவரது இரண்டாம் வருகையை நம்மால் உணர முடியும். ஆகவே இவ்விருச் சிந்தனைகளும் நாம் ஆன்மீக உணர்வுடனும், இறையனுபவத்துடனும், உயரிய எதிர்நோக்குடனும் வாழ நம்மை அழைத்துச் செல்கிறது.

ஈசோவின் இளமை காலத்தை அழகாக எழுதிய நற்செய்தியாளர்கள், எதிர்பாராத வகையில் நடந்த அவரது பிறப்பை இவ்வாறு கூறிவைத்தனர்: ‘‘அஞ்சாதீர்கள், இதோ! மக்களுக்கெல்லாம் மகிழ்சியூட்டும் மாபெரும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்’’ (லூக்கா 2:11). இவ்வாறு மாட்டுத் தொழுவத்தில் பாலனாக பிறந்த உலக மீட்பராம் மெசியாவை சாதாரண மக்களே கண்டுணர்ந்தார்கள். தூய அன்னை மரியாள், தூய யோசேப்பு, ஆட்டிடையர்கள், சீமோன், அன்னா மற்றும் தற்பெருமையற்ற ஏழை எளிய மக்கள் அவரை ஏற்றுக் கொண்டனர். குழந்தை ஈசோவின் பிறப்பை எதிர்பார்த்து காத்திருந்த அறிவுடையவர்களும் செல்வந்தர்களுமென கருதப்பட்ட ஞானிகள் கூட அவரை மண்டியிட்டு வணங்கினர். அதற்கு காரணம் இவர்கள் குழந்தை உள்ளம் படைத்தவர்களாகவும் தங்களது தகுதி இன்மையை உணர்ந்தவர்களாகவும் காணப்பட்டார்கள் என்பதே. அவ்வாறு நாமும் இந்த கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடும் இந்நாட்களில் நாம் நமது தகுதியின்மையை உணர்ந்து எளிமையோடு அவரைக் காண ஆவலோடு செல்லும்போது புல்மெத்தையில் பிறந்த குழந்தையின் மாட்சியை உணரவும் அவரது ஆன்மீக கொடைகளை பெற்றுக்கொள்ளவும் இயலும்.

இறைமகனான ஈசோ மாட்டுக்கொட்டகையில் மட்டும் பிறக்கவில்லை, மாறாக அவரது பிறப்பு இன்றும் இவ்வுலகில் அவரை ஏற்றுக்கொண்டு அவரது இறைத்தன்மையை பறைசாற்றும் ஒவ்வொருவரின் மனதிலும் தொடர்கிறது. இறைமகன் ஈசோவின் அருள்கொடைகளைப் பெற கத்தோலிக்கத் திருச்சபையில் பல ஆன்மீகப் பயிற்சிகள் உள்ளன. அவற்றில் முதன்மையாக கருதப்படுவது, நாம் ஒவ்வொரு நாளும் ஒப்புகொடுக்கும் திருப்பலியே. திருப்பலியின் போது இறைமகன்

ஈசோ நற்கருணையின் வடிவில் நம் ஒவ்வொருவரின் இதயங்களிலும் எழுந்தருளி வருகின்றார். எனவே, கிறிஸ்து பிறப்புவிழா திருப்பலியை பக்தியோடு நாம் ஒப்புக்கொடுக்கும் போது, திருப்பலி என்னும் திருவருட்சாதனம், குழந்தை ஈசோவை நேருக்கு நேர் தரிசிக்கும் ஒரு தெய்வீக நிமிடங்களாக நமக்கு அமையும் என்பதில் ஐயமில்லை. காரணம், அப்பத்தில் வீடு என பொருள்படும் பெத்லகேமில் பிறந்த இயேசு, அப்பத்தின் வடிவில் இன்று நம்மில் குடிகொள்ள வரும் நேரம் திருப்பலியே. அவ்வாறே இவ்இறை அனுபவ தரிசனத்திற்கு மிக இன்றியமையாததாக விளங்குவது ஒப்புரவு திருவருட்சாதனம் ஆகும். ஒப்புரவு திருவருட்சாதனம் என்பது இறைவனோடு நாம் கொண்டுள்ள உறவில் பிளவு ஏற்படாமல் இருக்க நமக்கு உதவும் மற்றொரு வழியுமாகும்.

கிறிஸ்துமஸ் என்பது ஒரு பகிர்தலின் விழாவும் கூட என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விழைகிறேன். கடவுள் தனது இறைத்தன்மையை மனிதனோடு பகிர்ந்து கொள்ள முதலில் முயற்சி எடுத்தார். அவ்வாறே, நம்மை இறைதன்மை உடையவர்களாக மாற்ற இறைவன் மனிதத்தன்மையை ஏற்றுக்கொண்டார். அவர் மனிதத்தன்மையை ஏற்று மனிதனாக இவ்வுலகில் பிறந்த நாளையே நாம் கிறிஸ்துமஸ் விழாவாக கொண்டாடுகிறோம். எனவே, இவ் விழாவில் நமக்கு இறைவன் தந்துள்ள அருள்கொடைகளை நாம் நமது சகோதர சகோதரிகளோடு பகிர்ந்து கொள்ளும் போது! நமது கிறிஸ்துமஸ் விழா முழுநிலையை அடைகிறது. புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய 2ஆம் திருமுகம் 9ஆம் அதிகாரம் 7ஆம் வசனத்தில் ''முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்'' என்று கூறினார். இவ்வார்த்தைகளை தனது வாழ்வில் ஏற்று, நம் ஒவ்வொருவருக்கும் ஒரு எடுத்துகாட்டாக வாழ்ந்து காட்டியவர்தான் புனித அன்னைத் தெரசா. நாமும் அவரது பாதச்சுவடுகளை பின்பற்றி கடவுளின் அன்புக்குரியவராவோம்.

அன்பான இறைமக்களே, இவ்வருடம் நமது பங்குகளுக்கும் மறைமாவட்டத்துக்கும் நம் ஒவ்வொருவருக்கும் இறை ஆசீர் ஏராளமாக பொழியப்பட்ட வருடமாக அமைந்தது. அவைகளின் ஒரு சிறு செய்திகளை என்னுடைய கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை வழியாகக் உங்கள் இல்லங்களுக்கு அனுப்பியுள்ளேன். அவைகளை நாம் வாசித்து இறைவனுக்கு நன்றி கூறுவதோடு, மேலும் தாராளமான இறைகொடைகளை பொழிய இறைவனோடு செபிப்போம். அவ்வாறே நாம் இறை நம்பிக்கையில் வளர நமது மறைமாவட்டம் எடுத்த எல்லா முயற்ச்சிகளுக்கும் நீங்கள் கொடுத்த ஒத்துழைப்புக்கும், உதவிக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

ஈசோ மெசியாவில் அன்பானவர்களே, இத்தருணத்தில் உங்கள் அனைவருக்கும் எனது மனமகிழ்ந்த கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, இறையருள் நிறைந்த ஒரு புத்தாண்டையும் இறைவனிடமிருந்து நீங்கள் பெற வாழ்த்துகிறேன். அத்தோடு குழந்தை ஈசோவோடு இணைந்து வாழும் ஒரு விசுவாச அனுபவம் நம் ஒவ்வொருவருக்கும் கிடைப்பதற்காக இறைவனிடம் உருக்கமாக செபிக்கிறேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக,!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்

16.12.2016

✞ ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

*குறிப்பு: டிசம்பர் 18ம் நாள் ஞாயிறு திருப்பலிக்கிடையே இத்திருமுகம் வாசிக்கவும்.*